V6T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 6

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **6×1=6**

1) தகவல்தொடர்பு முன்னேற்றத்தால் ............... சுருங்கிவிட்டது.

அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

2) தொன்மை என்னும் சொல்லின் பொருள் ...............

அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

3) இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ...............

அ) பசு ஆ) பால் இ) அணில் ஈ) ஆணி

4) சித்தம் என்பதன் பொருள் ...............

அ) உள்ளம் ஆ) மனம் இ) குணம் ஈ) வனம்

5) சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ...............

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை

இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

6) வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) வெண்+குடை ஆ) வெண்மை+குடை

இ) வெம்பு+குடை ஈ) வெம்மை+குடை

**II. குறுவினா: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **3×2=6**

7) பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

8) தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?

9) சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

10) வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

11) சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?

**III. சிறுவினா: (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்)** **1×3=3**

12) அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

13) பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக?

**IV. மனப்பாடப் பகுதி: (அடிபிறழாமல் எழுதுக)** **1×3=3**

14) 'தமிழுக்கும் அமுதென்று' எனத் தொடங்கி 'நிருமித்த ஊர்' என முடியும் இன்பத் தமிழ் பாடலை எழுதுக.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×2=6**

15) கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக:

அ) கவிதை ஆ) பரிபாடல்

16) **பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் ............... என்று பெயர்.

(பறவை / பரவை)

ஆ) முத்து தம் ............... காரணமாக ஊருக்குச் சென்றார்.

(பணி / பனி)

17) **கலைச்சொல் தருக:**

அ) Face book

ஆ) Weather

**VI. கட்டுரை வினா: (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்)** **1×6=6**

18) விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

19) 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

----------